விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.9510 / அ3/2024 நாள்.25.01.2025

பொருள்: பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பணிவரன்முறை விழுப்புரம் மாவட்டம், அரசூர், அரசு மேல்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் திரு.ர.குமார் என்பாருக்கு - இளநிலை உதவியாளர் பதவியில் 29.09.2023 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் -சார்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக்கல்வித் (ப.க.1(1) துறை நாள்- 09.09.2022.
2. சென்னை-03, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளரின் கடிதம் எண். 1975/PSD-C2/2023 நாள்.25.08.2023.
3. சென்னை-6 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின்(பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.56703/அ4/இ1/2023 நாள்.21.09.2023.
4. விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 06871/அ3/2023 நாள்-27.09.2023.
5. விழுப்புரம் மாவட்டம், அரசூர், அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் கடிதம் ந.க.எண்.118/2024 நாள்.10.10.2024

******

பார்வை-2ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி -IV-ன் கீழ் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை-4ல் காணும் விழுப்புரம் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதின் அடிப்படையில் 29.09.2023 பிற்பகல் முதல் விழுப்புரம் மாவட்டம், அரசூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ர.குமார் என்பாருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியாளர் பெயர் | : | திரு.ர.குமார் |
| 2. | பதவி | : | இளநிலை உதவியாளர் |
| 3. | பணிபுரியும் அலுவலகம் | : | அரசு மேல்நிலைப்பள்ளி,<br>அரசூர்<br>விழுப்புரம் மாவட்டம். |
| 4. | பிறந்த தேதி | : | 10.04.1994 |

Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 5. | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | : | 29.09.2023 பிற்பகல் |
| 6. | நியமன முறை மற்றும் தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண். | : | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் (TNPSC Group IV)/06 |
| 7. | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்படும் நாள். | : | 29.09.2023 பிற்பகல் |
| 8. | தகுதிகாண் பருவத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் | : | மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு நிறைவான பணிக்காலம் |

மேலும் இவருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவக் காலத்திற்குள், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், பவானிசாகர் இளநிலை உதவியாளருக்கான அடிப்படைப் பயிற்சியிலும் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

தகுதிகாண்பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட பின்னர் தான் இரண்டாவது மற்றும் தொடர் பருவக்கால ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்படுகிறது. அன்னாருக்கு தற்போது பணிவரன்முறை செய்யப்படுவது இளநிலை உதவியாளர் பதவியில் முன்னுரிமையாக அமையாது என்றும், மாநில முன்னுரிமைப் பட்டியலின்படியே இவரது முன்னுரிமை அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான விவரங்களை சம்பந்தப்பட்டவரது பணிப்பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்படுவதுடன் அன்னாரது பணிப்பதிவேடு ஒரு தொகுப்பு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு- அசல்பணிப்பதிவேடு – 1 தொகுப்பு.

23/1/2025

முதன்மைக்கல்விஅலுவலர்
விழுப்புரம்.

13/01/2025

பெறுநர்- திரு.ர.குமார், இளநிலை உதவியாளர்
அரசு மேல்நிலைப்பள்ளி, அரதூர்,
விழுப்புரம் மாவட்டம்.(உரிய வழியாக)

நகல்- தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, அரதூர்.

Scanned with OKEN Scanner